**42 திருமுகம் கொடுத்த படலம்**

வரகுண பாண்டியனின் வேண்டுதலால் இதர இடங்களில் பாடுவதை அறவே ஒழித்துசுந்தரேசரின் கோயிலில் மட்டும் மூன்று வேளையும் தவறாமல் பாடி வந்தான் பாணபத்ரன். இதனால் வறுமை அடைந்தான் பாணபத்ரன். தன் பக்தன் வறுமையில் வாடுவதைப் பொருக்காத ஐயன் பாண்டியன் கருவூலத்திலிருந்து செல்வங்களை கவர்ந்து ஒவ்வொரு நாளும் பாணன் முன்வைப்பார். அதனைக் கொண்டு வாழ்ந்து வந்தான் பாணபத்ரன்.சிலநாட்கள்சென்றபின்ஐயன்தான் கொடுப்பதை நிறுத்திவிட்டார். மீண்டும் பட்டினியால் வாடினான் பாணன்.

ஒரு நாள் பாணன் கனவில் சிவபெருமான் தோன்றி, இதுநாள் வரை தான் பாண்டிய மன்னனின்க ருவூலத்திலிருந்து பெருளைக் கவர்ந்து வந்து தந்ததாகவும், இதனை மன்னன் அறிந்தால் கருவூலத்தின் காவலாளிக்குஅல்லவா தண்டனை கிடைக்கும். அதனால் தன்னிடம் அன்புக் கொண்டுள்ள சேரனிடம் தான் கொடுக்கும் ஓர் ஒலையைக் (திருமுகம்) கொண்டு தருமாறுகூறியருளினார் விழித்தெழுந்த பாணன் மகிழ்ந்தான்.

ஐயனுடைய திருமுகத்தை எடுத்துக் கொண்டு பாண பத்ரன் சேரமாநாட்டிற்குச் செல்லும் வழியில் ஓர் தண்ணீர் பந்தலில் தங்கினான். ஐயன் அன்றிரவு சேரன் கனவில் தோன்றி, தான் மதுரை சித்தர் என்றும் தன்னுடைய பக்தன் பாணபத்ரனுக்கு திருமுகம் கொடுத்துள்ளதாகவும், அவனுக்கு பொருட்கள் கொடுத்து அனுப்புமாறு கூறினார்.

கனவில் தான் கண்டபடி பாணனைத் தண்ணீர் பந்தலுக்குச் சென்று சந்தித்து அந்த திருமுகத்தை பொற் பீடத்தில் வைத்து பாணனை யானையில் அரண்மனக்கு அழைத்துச் சென்றான் சேரன்.

சேரன் பாணனை நன்கு உபசரித்து, வேண்டிய மட்டும் பொருட்கள் அளித்து மதுரைக்கு வழி அனுப்பி வைத்தான். பொருளுடன் மதுரை திரும்பிய பாணன் பலருக்கும் உதவி செய்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

**பல்லவி**

அரசசபை நீங்கி <u>அனவரதமும்</u> உந்தன்
அருகில் பாடிய பாணன் வறுமையில் வருந்தினான்

**அனுபல்லவி**

அரசு பௌக்கிஷத்து பொருள்களை கவர்ந்து
அவன் முன்னே வைத்து வறுமை நீக்கினாய்

**சரணம்**

அரசன் அறிய வந்தால் பலருக்கும் துன்ப மென்று
பாணபத்ரன் கனவில் தோன்றி சொல்லிய பின்
சேர நாட்டரசனுக்கு திருமுகம் தந்து பின்
அவன் கனவிலும் சொல்லி பொருள் கிடைக்கச் செய்தாய்